Dinamalar 01.03.2022

# விரைவில் மருத்துவ பள்ளி துவங்கப்படும்

## அவினாசிலிங்கம் பல்கலை வேந்தர் தகவல்

கோவை, மார்ச் 1–

மருத்துவ பள்ளி விரைவில் துவங்கப்பட உள்ளது என, அவினாசிலிங்கம் பல்கலை வேந்தர் தியாகராஜன் கூறினார்.

அவினாசிலிங்கம் பல்கலைம் 'நாக்' குழுவினரால், 3.65 தரவரிசைப் புள்ளிகளை பெற்று ஏ ++ கிரேடு பெற்றுள்ளது. 2027ம் ஆண்டு பிப்., வரை இத்தரவரிசையில் பல்கலை செயல்படும்.

நிருபர்களிடம் பல்கலை வேந்தர் தியாகராஜன் கூறியதாவது:

தேசிய மதிப்பீட்டு குழுவினர் கடந்த, 14ம் தேதி முதல் மூன்று நாட்கள் மதிப்பீடு செய்தனர். பல்கலை தொடர்ந்து தேசிய அளவில், மிக உயர்ந்த தரவரிசை புள்ளிகளுடன் மகளிர் பல்கலையாக மாற்றம் பெற்றுள்ளது.



■ தியாகராஜன்

பல்கலையில் விரைவில், மருத்துவக் கல்வி பயிற்றுவிக்கும் பள்ளி துவங்கப்பட உள்ளது. ஏற்கனவே பல்கலையில், மருத்துவர் உதவி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஏற்கனவே பல்கலையில் டயாலிசிஸ், விபத்து மற்றும் அவசர சிகிச்சைகள், உள்ளிட்ட பல்வேறு தொழில்நுட்ப பாடங்கள் துவங்கப்பட்டுள்ளன. பல்கலை ஐந்து மருத்துவமனைகளுடன் ஒப்பந்தம் செய்து, மாணவியருக்கு பயிற்சி அளித்து வருகிறது.

இம்மருத்துவமனைகள் வருங்காலத்தில் மருத்துவ பள்ளி துவங்கும் போது, மாணவ மாணவியரை பயிற்றுவிக்கும். இதுதவிர, ஆன்லைன் மற்றும் தொலைதூர கல்வி மையங்கள் துவங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வாறு, அவர் கூறினார்.

பல்கலை துணைவேந்தர் பாரதி ஹரிசங்கர், அவினாசிலிங்கம் கல்வி நிறுவனங்கள் நிர்வாக அறங்காவலர் மீனாட்சி சுந்தரம் உடனிருந்தனர்.